**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 75/2021.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 (பட்டியல் சாட்சி – 1).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பாண்டீஸ்வரி. | ஜாதி | |
| கணவர் பெயர் | பிரகாஷ். | தொழில் | நகைக் கடையில் வேலை. |
| கிராமம் | டொம்புச்சேரி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 27/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.04.2026.

**(1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜர். 4–வது எதிரி இறந்துவிட்டார்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, டொம்புச்சேரியில் குடியிருந்துகொண்டு, நகைக் கடையில் வேலை செய்து வருகிறேன். எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த 11.05.2020 ஆம் தேதியன்று எதிரிகள் அவர்களது வீட்டில் சிமெண்டை வைத்து பூசிக்கொண்டிருந்தார்கள். எதிரி நதியா பாத்ரூம் போவதற்காக எங்கள் வீட்டிற்கு அருகே சென்றார். நான் அவரை வீட்டிற்குள் இருக்கும் அறையை உபயோகப்படுத்துமாறு என் கணவரிடம் கூறினேன். அதை எதிரி நதியா தவறாகப் புரிந்துகொண்டுவிட்டார். பின்னர், 12.05.2020 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு டொம்புப்சேரியில் உள்ள எங்களது வீட்டின் முன்பாக சுத்தம் செய்துகொண்டிருந்தேன். அப்போது, எதிரிகள் அனைவரும் தேவிடியா முண்ட, கொசத்தி, இது என் அப்பன் வீட்டு இடம், உன் அப்பன் வீட்டு இடமா, உனக்கு வாரிசே இல்லாமல் அழித்துவிடுவேன் எனக் கூறி, அருகேயிருந்த சிமெண்ட் கற்களால் எறிந்தார்கள். அதில் எனக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது. அந்த சமயத்தில் நான் 6 மாதங்கள் கர்ப்பமாக இருந்தேன். பின்னர், நதியா மற்றும் அவரின் கணவர் செல்லத்துரை ஆகியோர்கள் என்னைத் தலைமுடியைப் பிடித்து இழுத்து, கீழே தள்ளி, வயிற்றில் உதைத்து, அடித்தார்கள். அப்போது, என் கணவர்,

என் மாமியார் வீரம்மாள் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆகியோர்கள் வந்து விலக்கிவிட்டார்கள். எனது கணவர் டொம்புச்சேரியில் உள்ள ஆரம்ப சுகாதா நிலையத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். அன்றைய தினம் 11.00 மணிவரை எனது குழந்தைக்கு இருதயத் துடிப்பு இல்லாமல் இருந்ததால் என் கணவரிடம் குழந்தை இறந்துவிட்டதாகக் கூறி மருத்துவமனையில் கையெழுத்து வாங்கினார்கள். அதன்பின்னர், சிறிது நேரம் கழித்து குழந்தைக்கு இருதயத் துடிப்பு வந்தது. மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, 4-வது எதிரி ரவி என்னுடன் வந்து பிரச்சனை செய்து அடித்தார். என்னை மேல் சிகிச்சைக்காக, தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். சிகிச்சையிலிருந்தபோது, விசாரிக்க வந்தபோலீசாரிடம் சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்தப் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி மருத்துவமனையில் நான் 7 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

(எதிரிகள் தரப்பில், வழக்கறிஞர் வைக்கப் போதுமான வசதி இல்லை எனக் கூறியதால், அவர்களிடம் மனுப் பெற்று DLSA, தேனிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது).

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.18 17:17:47 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**